இலங்கைக் கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் 8 பேர் கைது

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள்.

ராமேசுவரம்/திருக்குவளை, ஆக. 27: கச்சத்தீவு- தலைமன்னாருக்கு இடையே மீன் பிடித்த ராமேசுவரம் மீனவர்கள் 8 பேரை இலங்கைக் கடற்படையினர் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்திலிருந்து திங்கள்கிழமை 430 விசைப்படகுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் திங்கள்கிழமை நள்ளிரவு கச்சத்தீவு-தலைமன்னாருக் கு இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மரியசிவா என்பவரது விசைப் படகை பறிமுதல் செய்தனர். மேலும், படகிலிருந்த 8 மீனவர்களைக் கைதுசெய்து, தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணைக்குப் பிறகு மீனவர்களின் விசைப் படகு பறிமுதல் செய்யப்பட்டு, 8 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக வழக்குப் பதிந்து, மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இவர்களிடம் விசாரணை நடத்திய நீதிபதி, மீனவர்கள் 8 பேரையும் செப்டம்பர் 5ஆம் தேதி வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

கடற்கொள்ளையர்கள் தாக்குதல்: நாகை மாவட்டம், கீழையூர் ஒன்றியம், செருதூர் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த தங்கதுரை என்பவர் ஃபைபர் படகில், தனது மகன் மணிகண்டபிரபு, அதே பகுதியை சேர்ந்த கங்காதரன் ஆகியோருடன் திங்கள்கிழமை காலை மீன்பிடிக்க கடலுக்குள் சென்றார். கோடியக்கரைக்கு தென் கிழக்கே 15 கடல்மைல் தொலைவில் அவர்கள் திங்கள்கிழமை இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, 3 படகுகளில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 9 பேர், செருதூர் மீனவர்களை ஆயுதங்கால் தாக்கி, ஜிபிஎஸ் கருவி, வாக்கிடாக்கி, வலை, கைப்பேசி ஆகியவற்றை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதுகுறித்து, கீழையூர் கடலோரக் காவல் குழும போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பட்டாசு ஆலை வெடி விபத்து: தலைமறைவாக இருந்த இருவர் கைது

நத்தம், ஆக. 27: நத்தம் அருகேயுள்ள அவிச்சிபட்டி பட்டாசு ஆலையில் சனிக்கிழமை ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 2 பேர் உயிரிழந்ததையடுத்து, தலைமறைவான பட்டாசு ஆலை உரிமையாளர், மேலாளர் ஆகியோரை நத்தம் போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள ஆவிச்சிபட்டியைச் சேர்ந்தவர் செல்வம் (48). முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர். இவரது பட்டாசு ஆலையில், விருதுநகர் மாவட்டம், திருத்தங்கலைச் சேர்ந்த கண்ணன் என்ற சின்னன் (42), சிவகாசி விஸ்வநத்தம் பகுதியைச் சேர்ந்த முனீஸ்வரன் என்ற மாசா (30) ஆகியோர் பட்டாசுகள் தயாரிக்கும் பணியில் சனிக்கிழமை இரவு ஈடுபட்டிருந்தனர். அப்போது, ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி இருவரும் உயிரிழந்தனர்.

இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தலைமறைவான உரிமையாளர் செல்வத்தை தனிப் படை அமைத்து தேடி வந்தனர். இந்த நிலையில், செல்வத்தின் உறவினரிடம் போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது, தலைமறைவான செல்வம் நத்தம்-ஏரக்காபட்டியில் பதுங்கி இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அங்கு சென்ற போலீஸார், செல்வத்தை கைது செய்தனர். மேலும், பட்டாசுக் கிடங்கு மேலாளர் அரியலூர் மாவட்டம், திருமானூர்-மணிமேகலை நகரைச் சேர்ந்த அருண்பிரசாத்தை (39) வேம்பரளி சோதனைச் சாவடியில் வாகன தணிக்கையின் போது போலீஸார் கைது செய்தனர்.

காண்டாமிருகத்தின் கொம்பை விற்கமுயன்ற 5 பேர் கைது

கும்பகோணம், ஆக. 27: தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே காண்டாமிருகத்தின் கொம்பை விற்பனை செய்ய முயன்ற 5 பேரை வனத்துறையினர் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

கும்பகோணம் பகுதியில் காண்டாமிருகத்தின் கொம்பை விற்பனை செய்ய சிலர் முயற்சிப்பதாக கிடைத்த தகவலை தமிழ்நாடு வனச் சரணாலய குற்றத் தடுப்புப் பிரிவினர் கும்பகோணம் வனத் துறையினரிடம் தெரிவித்தனர்.

இதன்பேரில், கும்பகோணம் வனச்சரகர் பொன்னுச்சாமி தலைமையிலான வனத்துறையினர் திங்கள்கிழமை விசாரணை நடத்தி திருநாகேசுவரத்தில் தனியார் விடுதியில் தங்கியிருந்தவர்களிடம் சோதனை மேற்கொண்டனர். அவர்களிடம் காண்டாமிருகத்தின் கொம்பு இருந்ததும், மருத்துவப் பயன்பாட்டிற்காக அதை அவர்கள் விற்பனை செய்ய முயன்றதும் தெரிந்தது.

இதுதொடர்பாக நாகப்பட்டினத்தைச் சேர்ந்த கலியபெருமாள் (80), திருவாரூரைச் சேர்ந்த காஜா மைதீன் (76), கும்பகோணத்தைச் சேர்ந்த செந்தில் (45), தென்னரசு (47), விஜயகுமார் (57) ஆகிய 5 பேரை வனத் துறையினர் செவ்வாய்க்கிழமை கைது செய்து கும்பகோணம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

அவதூறு வழக்கு: நீதிமன்றத்தில் ஆஜரானார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஆக. 27: திமுக எம்.பி. தொடர்ந்த அவதூறு வழக்கில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நேரில் ஆஜரானார். அப்போது, இந்த வழக்கு விசாரணைக்கு ஆஜராவதில் இருந்து விலக்களிக்க வேண்டும் என்று அவர் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை புரசைவாக்கம் பகுதியில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில், மத்திய சென்னை தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட தயாநிதி மாறன் குறித்து எடப்பாடி பழனிசாமி பேசினார்.

இதையடுத்து தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி பேசியதாக அவருக்கு எதிராக தயாநிதி மாறன் குற்றவியல் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு எழும்பூர் நீதிமன்றத்தில் இருந்து சென்னையில் உள்ள எம்.பி., எம்எல்ஏ-க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி ஜி.ஜெயவேல் முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தபோது, எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜரானார்.

அவரது சார்பில் ஆஜரான வழக்குரைஞர் அய்யப்பராஜ், எடப்பாடி பழனிசாமி சார்பில் மனு தாக்கல் செய்தார். அதில், 'உடல் நலக் கோளாறு காரணமாக மருந்து, மாத்திரைகள் உட்கொண்டு வருகிறேன். இந்த வழக்கை தாமதப்படுத்தும் நோக்கம் எனக்கு இல்லை. எனக்கு 70 வயதாகி விட்டதால் மூத்த குடிமகன் என்ற முறையிலும், சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும், முன்னாள் முதல்வர் என்ற முறையிலும் அடுத்தமுறை வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராக விலக்கு அளிக்க வேண்டும்' எனக் கோரினார். இதையடுத்து விசாரணையை செப்.19-ஆம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

அரசுப் பள்ளியின் மேற்கூரை பூச்சு பெயர்ந்து விழுந்து 3 மாணவர்கள் காயம்

பிளஸ் 1 வகுப்பறையில் பெயர்ந்து விழுந்த மேற்கூரை.

ஊத்தங்கரை, ஆக. 27: ஊத்தங்கரை அருகே அரசுப் பள்ளியின் மேற்கூரை பூச்சு பெயர்ந்து விழுந்ததில் வகுப்பறையில் படித்துக் கொண்டிருந்த 3 மாணவர்கள் காயமடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையை அடுத்த பெரிய தள்ளப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை 413 மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் பிளஸ் 1 அறிவியல் வகுப்பறையில் மாணவர்கள் காலையில் வழக்கம்போல படித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென வகுப்பறையின் மேற்கூரை பூச்சு பெயர்ந்து அவர்கள் மேல் விழுந்தது. இதில், மாணவர்கள் சந்தோஷ், மணிகண்டன், வெங்கடேசன் ஆகியோருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவர்கள் அருகில் உள்ள சிங்காரப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பினர்.

தரமற்ற கட்டடம்: மாணவர்கள் பயிலும் இக்கட்டடம் கடந்த 2021-22 ஆம் நிதி ஆண்டு மக்களவை உறுப்பினர் செல்லக்குமார் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ. 21.30 லட்சம் செலவில் கட்டப்பட்டு, கடந்த ஜூன் மாதம் முதல் மாணவர்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டது. பயன்பாட்டுக்கு வந்து 2 மாதங்களே ஆனநிலையில் கட்டட மேற்கூரை பூச்சு பெயர்ந்து விழுந்தது. இக்கட்டடம் தரமின்றி கட்டப்பட்டுள்ளதாக பெற்றோர் குற்றம்சாட்டினர்.

இந்து சமய அறநிலையத் துறை மதப் பிரசாரத்துக்கானது அல்ல

சென்னை, ஆக.27: இந்து சமய அறநிலையத் துறை கோயில் சொத்துகளை பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய துறையே தவிர, மதப் பிரசாரத்துக்கான துறை அல்ல என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

இந்து சமய அறநிலையத் துறை என்பது கோயில் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், வரவு - செலவுகளை சரி பார்ப்பதற்குமான துறையே தவிர, பக்தியை பரப்புவதற்கான ஒன்றல்ல. பாராட்டவேண்டிய நேரத்தில் மனம் திறந்து பாராட்டுவது போலவே, சறுக்கல் நேரும் நேரத்தில் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டியதும் திராவிடர் கழகத்தின் முக்கிய கடமை.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் , கந்த சஷ்டி விழாக் காலங்களில் முருகன் கோயில்களில் மாணவர், மாணவிகளைக் கொண்டு கந்தசஷ்டிகவசம்பாராயணம்செய்விக்கப்படும், முருகப் பெருமானின் பெருமைகள் மற்றும் இலக்கியங்கள் குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள கோயில்களின் சார்பில் நடத்தப்படும் கல்லூரிகளில் சிறப்பு ஆன்மிக பாடப் பிரிவுகளை ஏற்படுத்த அரசுக்குப் பரிந்துரைக்கலாம் ஆகிய 2 தீர்மானங்களை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

இந்து அறநிலையத் துறையால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் மதச் சார்புடையன அல்ல. திமுக அரசின் கொள்கை என்பது மதச்சார்பற்ற தன்மை கொண்டது. இதற்குமேல் விளக்கத் தேவையில்லை என்று கி.வீரமணி கூறியுள்ளார்.

ஃபெல்லோஷிப் படிப்பு: அண்ணாமலை பிரிட்டன் பயணம்

சென்னை, ஆக. 27: ஃபெல்லோஷிப் படிப்புக்காக தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை பிரிட்டனுக்கு செவ்வாய்க்கிழமை இரவு புறப்பட்டுச் சென்றார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியது:

பாஜகவில் உறுப்பினர் சேர்க்கை மீண்டும் புதிதாக தொடங்கவுள்ளது. செப்.1-ஆம் தேதி முதல் உறுப்பினர் அட்டையை பிரதமர் நரேந்திர மோடி பெறவுள்ளார். இதையடுத்து தமிழகத்தில் செப். 2-ஆம் தேதி உறுப்பினர் சேர்க்கை தொடங்கும்.

அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி மீது நான் வைத்த விமர்சனம், என்னைப் பொருத்தவரை நூறு சதவீதம் சரியானது. அதைத் திரும்பப் பெறப் போவதில்லை. அதிலிருந்து நான் பின் வாங்க மாட்டேன்.

பிரிட்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஃபெல்லோஷிப் படிப்புக்காக செல்கிறேன். பிரதமர் அனுமதி கொடுத்து வெளிநாடு அனுப்புகிறார். இதை படிப்புக்கு பாஜக அளிக்கக்கூடிய முக்கியத்துவமாக பார்க்க வேண்டும். மூன்று மாதங்கள் அங்குதான் இருப்பேன். ஆனால், எனது இதயம் தமிழகத்தில்தான் இருக்கும் என்றார் அவர்.

ரேஷன் அரிசியை வாங்கி விற்கும் நபர்கள் மீது குண்டர் சட்டம் கூடாது: உயர்நீதிமன்றம் கருத்து

சென்னை, ஆக.27: அரசு குடோனிலிருந்து ரேஷன் அரிசியை ஒருவர் கடத்தியிருந்தால் அவர் மீது குண்டர் சட்டத்தை பிரயோகிக்கலாம்; அதே நேரம், தனி நபர்களிடமிருந்து ரேஷன் அரிசியை வாங்கி விற்கும் நபர்கள் மீது குண்டர் சட்டத்தை பிரயோகிக்கக் கூடாது என்று உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

கடந்த 2023- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆயிரத்து 200 கிலோ ரேஷன் அரிசியை கர்நாடகத்துக்கு கள்ளச் சந்தையில் விற்க முயன்றதாக கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி என்பவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து அவரை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க சேலம் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

குண்டர் சட்டத்தை ரத்து செய்யக் கோரி சத்தியமூர்த்தி மனைவி பூஞ்சோலை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், வி.சிவஞானம் அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், 'மனுதாரரின் கணவர் அரசு குடோனிலிருந்து ரேஷன் அரிசியை கடத்தியிருந்தால் அவர் மீது குண்டர் சட்டத்தை பிரயோகித்திருக்கலாம். ஆனால், பல தனி நபர்கள் ரேஷன் அரிசியை இது போன்ற நபர்களுக்கு விற்கின்றனர். எனவே, தேவைப்படாத நபர்களுக்கு அரசு ரேஷன் அரிசியை வழங்கக் கூடாது. இது போன்ற செயல்களுக்காக குண்டர் சட்டத்தை பிரயோகிக்கக் கூடாது' என்று அறிவுறுத்தி, சத்தியமூர்த்தி மீதான குண்டர் தடுப்பு சட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

நீதிபதிகளுக்கு ரேஷன் அரிசி உணவு: இந்த வழக்கு விசாரணையின் போது. நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம், மதுரை உயர்நீதிமன்றத்தில் பணியாற்றியபோது, அங்கு ரேஷன் அரிசி மயில்களுக்கு உணவாக பயன்படுத்தப்பட்டதையும், அதே ரேஷன் அரிசி நீதிபதிகளுக்கான உணவில் கலக்கப்பட்டதையும் ஆய்வு மூலம் கண்டுபிடித்ததை நினைவு கூர்ந்தார்.

இதனிடையே, மணல் கடத்தல் வழக்குகளில் எத்தனை பேர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து முன்னரே கேள்வி எழுப்பியிருந்த நிலையில், இது குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி தமிழக அரசு தரப்புக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஓய்வுபெற்ற பெண் காவல் ஆய்வாளர் கொலை: மதிமுக மாவட்டச் செயலர் கைது

கஸ்தூரி.

காஞ்சிபுரம், ஆக. 27: காஞ்சிபுரத்தில் பணி ஓய்வு பெற்ற பெண் காவல் ஆய்வாளரை கொலை செய்தது தொடர்பாக மதிமுக மாவட்ட செயலாளர் வளையாபதியை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

காஞ்சிபுரம் காலண்டார் தெருவைச் சேர்ந்த ராஜேந்திர பாபு மனைவி கஸ்தூரி (62). இவர் காவல் துறையில் ஆய்வாளராக பணியாற்றி கடந்த 2020 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இந்நிலையில், கடந்த 22ஆம் தேதி கஸ்தூரி தனது வீட்டில் தலைகுப்புற விழுந்து இறந்துகிடந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சிவகாஞ்சி போலீஸார் சந்தேக மரணம் என வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில், காஞ்சிபுரம் மதிமுக மாவட்ட செயலாளரான வளையாபதி (65) என்பவரும், அவரது நண்பருமான பிரபுவும் சேர்ந்து கொலை செய்திருப்பது தெரியவந்துள்ளது. இந்நிலையில், இவ்வழக்கை கொலை வழக்காக மாற்றி, வளையாபதியை போலீஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலையில் தொடர்புடைய மற்றொரு நபரான தலைமறைவாகவுள்ள பிரபுவையும் தேடிவருகின்றனர். பணி ஓய்வு பெற்ற பெண் காவல் ஆய்வாளரான கஸ்தூரியின் வீட்டை விற்பனை செய்வது தொடர்பான பிரச்னையில், அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

AMBIKA COTTON MILLS LIMITED
Regd. Office: 9-A, Valluvar Street, Sivanandha Colony, Coimbatore-641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone:0422-2491504, Fax:0422-2499623
website: www.acmills.in, email: ambika@acmills.in

36 வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்களிப்பிற்கான தகவல் அறிவிப்பு

அன்பார்ந்த உறுப்பினர்களே

நிறுவனத்தின் 36வது வருடாந்திர உறுப்பினர்களின் பொதுக்குழு கூட்டம் **வரும் 2024-ம் வருடம் செப்டம்பர் 27, வெள்ளிக்கிழமை** அன்று மதியம் 12.00 மணிக்கு நடைபெற உள்ளது. மேலும் 2024-ம் வருடம் ஆகஸ்ட் 9-ம் நாள் என தேதியிட்ட பொதுக்குழு கூட்ட அறிவிப்பிலுள்ள வணிக பரிவர்த்தனைக்கான இந்த கூட்டமானது ஒளித்தோற்ற மாநாடு ("Video Conferencing / VC") / பிற ஒலியுணர் காட்சி வழிமுறைகள் ("Other Audio Visual Means / OAVM") எனும் நுட்ப பயன்பாட்டின் வாயிலாக நடைபெறவுள்ளது. நிறுவனங்கள் சட்டம் 2013, மற்றும் அதனை சார்ந்த விதிகள், இந்திய காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்றுவாரியம் ("SEBI") வெளியிட்டுள்ள பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் விதிமுறைகள் 2015, இவற்றுடன் நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகம் ("MCA") மற்றும் SEBI அவ்வப்போது வெளியிடும் சுற்றிக்கைகளுக்கு உட்பட்டு இந்த கூட்டம் நடைபெறவிருக்கிறது.

மேலும், MCA/SEBI சுற்றறிக்கைகளின்படி வருடாந்திர பொதுக்குழு கூட்டத்திற்கான அறிவிப்பு ("AGM Notice") / ஆண்டறிக்கை ("Annual Report"), 2024-ம் வருடம் ஆகஸ்ட் 23-ம் நாள் வரை ஏற்கனவே உறுப்பினர்கள் அவரவர் டெபொசிட்டரிகளிடம் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரிக்கு, 2024-ம் வருடம் ஆகஸ்ட் 27-ம் தேதி அனுப்பப்பட்டு நிறைவுபெற்றது.

2023-24 நிதியாண்டிற்கான விளக்க அறிக்கை உள்ளடக்கிய வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையத்தளமான www.acmills.in மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனைகளான BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகிய இணையத்தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

உறுப்பினர்கள் ஒளித்தோற்ற மாநாடு ("Video conferencing / VC") / பிற ஒலியுணர் / காட்சி வழிமுறைகள் ("Other Audio Visual / OAVM") வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் ("AGM Notice") வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் சட்டம், 2013-ல் உள்ள பொருந்தக்கூடிய விதிகளின்படியும் மேலும் இந்திய காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்று வாரியம் வெளியிட்டுள்ள பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் விதிமுறைகள் 2015-ல் உள்ள பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படியும், CDSL வழங்கும் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முறையை ("தொலை மின்னணு-வாக்களிப்பு") பயன்படுத்தி பொதுக் கூட்ட அறிவிப்பில், குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களின்மேல் உறுப்பினர்கள் வாக்களிக்க வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்கியுள்ளது. தொலைநிலை மின்னணு-வாக்களிப்பு / மின்னணு-வாக்களிப்புக்கான விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக்கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, பட்டய கணக்காளர் திரு. K. முரளி மோகன் அவர்களை வாக்களிப்பு முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக ஆய்வாளராக ("Scrutiniser") நியமித்துள்ளது.

தொலைதூர மின்னணு-வாக்களிப்பு 2024-ம் வருடம் செப்டம்பர் 24-ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு துவங்கி 2024-ம் வருடம் 26-ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு முடியும், இந்த மின்னணு-வாக்களிப்பு முறையில் மேலே குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் மட்டுமே வாக்களிக்க முடியும். இந்த கால அளவிற்கு பின், CDSL வாக்களிப்பு வசதியை முடக்கி விடும்.

VC/OAVM வசதி மூலம் உறுப்பினர்கள் பொது கூட்டத்தில் கலந்துக்கொள்ளும் உறுப்பினர்கள், தொலை மின்னணு-வாக்களிப்பு முறை தீர்மானத்தில் ஏற்கனவே வாக்களிக்காமல் இருந்து மற்றும் வேறு ஏதேனும் காரணத்திற்காகவும் வாக்களிப்பில் இருந்து தடை செய்யப்படாமல் இருந்தால், கூட்டத்தின் போது நடைபெறும் மின்னணு-வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கலாம். மேலும் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர் பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க மட்டுமே முடியும், அவரால் மீண்டும் வாக்களிக்க இயலாது.

வாக்கு உரிமை தீர்மானிப்பு நாளன்று உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது டெபொசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனீட்டாளர்கள் ("Beneficial Owners") பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு மட்டும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலை மின்னணு-வாக்களிப்பு அல்லது கூட்டத்தின் போது மின்னணு மூலம் வாக்களிக்கும் வசதியைப் பெற உரிமை உண்டு. உறுப்பினர்களின் வாக்குரிமை விகிதம் 2024-ம் வருடம் செப்டம்பர் 20-ம் தேதியன்று ("Cut off Date") நிறுவனத்தின் ஒட்டுமொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்திற்கு உறுப்பினர் அவரவர் வைத்திருக்கும் பங்கின் விகிதாச்சார அடிப்படையில் இருக்கும்.

மின்னணு முறையில் பொது கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று வாக்களிக்கும் உரிமம் தீர்மானிக்கப்படும் நாளன்று நிறுவனத்தின் உறுப்பினராகி பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அத்தகைய உறுப்பினர்கள் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்காக CDSL - இடம் பதிவு செய்திருந்தால், அவர்கள் இப்பொழுது வாக்களிக்க தங்களிடம் ஏற்கனவே இருக்கும் உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

பங்குதாரர்களின் மின்னஞ்சல் முகவரி ஏற்கனவே நிறுவனம்/ அதன் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் RTA/ டெபொசிட்டரிகளிடம் பதிவு செய்யப்பட்டிருந்தால், மின்னணு வாக்களிப்பிற்கான விவரங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பங்குதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். பங்குகளை காகித வடிவில் வைத்திருப்போர் அல்லது தங்கள் மின்னஞ்சல் முகவரியை ஏற்கனவே பதிவு செய்யாதவர்கள், ஆண்டு பொதுக்குழு கூட்ட தீர்மானங்களின் மேல் தங்கள் வாக்குகளை தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது கூட்டத்தின் சமயத்தில் நடைபெறும் மின்னணு வாக்களிப்பு ஆகியவற்றின் வாயிலாக செலுத்த கீழ் கண்ட விதிமுறைகளை பின்பற்றவும்.

அ. டீமாட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்களின் டெபொசிட்டரி பங்கேற்பாளரை ("DP"), தொடர்பு கொள்ளவும், தங்களின் DP அறிவுறுத்தும் செயல்முறையின் படி தங்கள் மின்னஞ்சல் முகவரியை டீமேட் கணக்கில் பதிவு செய்யவும்.

ஆ. பங்குகளை காகித வடிவில் வைத்திருப்போர், அதற்கென உள்ள படிவம், ஐஎஸ்ஆர்-1 மற்றும் பொருத்தமான படிவங்களில் விபரங்களை பூர்த்தி செய்து, நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் ("RTA"), லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்க்கு coimbatore@linkintime.co.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவு செய்ய வேண்டும், இதற்கு தேவையான படிவங்களை www.acmills.in என்ற நிறுவனத்தின் இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம்.

தொலைநிலை மின்னணு-வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் உங்களிடம் இருந்தால், 1800225533 எனும் கட்டணமில்லா எண்ணைத் தொடர்பு கொள்ளவும் அல்லது CDSL -ன் மூத்த மேலாளர், Mr. Rakesh Dalvi, அவர்களை helpdesk.evoting@cdslindia.com என்னும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையத்தளமான www.acmills.in என்ற முகவரியிலும் மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களான BSE Limited மற்றும் National Stock Exchange of India Limited -ன் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றில் காணப்பெறலாம்.

நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற பதிவேடுகள் 2024-ம் வருடம் செப்டம்பர் மாதம் 21-ம் நாள் சனிக்கிழமை முதல் 2024-ம் வருடம் செப்டம்பர் மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை வரை (குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நாட்களையும் சேர்த்து) உறுப்பினர் பொதுக்குழு கூட்டம் மற்றும் ஈவுத்தொகை செலுத்துதலுக்காக மூடப்படும் என அறிவிக்கப்படுகிறது. 2023-24ம் ஆண்டிற்கான ஈவுத்தொகை, உறுப்பினர் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டால், 2024-ம் வருடம் செப்டம்பர் மாதம் 20-ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று வணிக நேரத்தின் முடிவில் டெபொசிட்டரிகளால் வழங்கப்பட்ட உறுப்பினர்கள் பதிவேட்டின் விவரங்களின்படி உறுப்பினர்கள் மற்றும் பங்குகளின் பயனீட்டாளர்களுக்கு ("Beneficial owner") வழங்கப்படும்.

தேதி : 28 ஆகஸ்ட், 2024
இடம் : கோயம்புத்தூர்

அம்பிகா காட்டன் மில்ஸ் லிமிடெட்
P.V. சந்திரன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
(DIN : 00628479)

சுந்தரம் மியூச்சுவல்
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரி மாற்றம்:

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் KFIN டெக்னாலஜிஸின் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரி மாற்றத்தை குறித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இது சுந்தரம் பரஸ்பர திட்டங்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரப்பூர்வ மையமாகும்

தற்போதுள்ள முகவரி	புதிய முகவரி	நடைமுறைப்படுத்திய தேதி
KFIN டெக்னாலஜிஸ் லிமிடெட் 6-3-788/32-35, 3வது மாடி பிளாட் எண் 303, வம்சி எஸ்டேட், கனரா வங்கிக்கு மேலே, அமீர்பேட்டை, ஹைதராபாத், தெலங்கானா - 500 016.	KFIN டெக்னாலஜிஸ் லிமிடெட், JBS ஸ்டேஷன், லேயர் கான்கோர்ஸ் 1 (2வது தளம்) ஜூபிலி பஸ் மெட்ரோ நிலையம், செகந்திராபாத் - 500 009.	செப்டம்பர் 01, 2024

திட்டத் தகவல் ஆவணம் (கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை (கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் (SAI) அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 28, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), 044 4083 1500 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
ஃபேக்ஸ்: +91 44 2841 8108. www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

FOND & RESPECTFUL REMEMBRANCE

1957 2011
R. Padmanabhan
(Chellappa)
"Time fades to Memories but YOU continue to be our Inspiration. Miss you for ever"
Sashi Reka (Wife)
Akshara (Daughter)
Manivannan & Family
(Friend & Partner) &
Staff and workers of
Aqua Engineering Company
Coimbatore, Ph : 93631 56232